<u>குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் வரைவு விதிகள்</u>

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் **2009**–ன் கீழ் வரைவு விதிகள் தமிழ் வழியில் தயார் செய்யப்பட்டு கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோர்களின் பார்வைக்காக வெளியிடப்பட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தங்களுடைய ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை **05.01.2011**–க்குள், இணை இயக்குநர் (மேல்நிலைக்கல்வி), பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை – **600 006** என்ற முகவரிக்கு அஞ்சலிலோ அல்லது jdhssed@nic.in என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**உறுப்பினர் செயலர்**
குழந்தைகளுக்கான இலவச மற்றும்
கட்டாயக்கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக்குழு
மற்றும் பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(மேல்நிலைக்கல்வி)

# வரைவு விதிகள்

## அறிக்கை

2009 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டயாக் கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 35/2009) 38ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பெற்ற அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் விதிகளை இதன் வழி இயற்றுகிறார்.

பகுதி I – தொடக்கம்

1. குறுந்தலைப்பும், தொடக்கமும்

1) இவ்விதிகள் தமிழ்நாடு 2009 – ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச்சட்டம் என்று அழைக்கப்படும்.

2) இவை ---------- ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரத் தொடங்கும்.

2. பொருள் விளக்கம்

1) இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றபடி

a) “சட்டம்” என்பது 2009 – ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக்கல்வி மற்றும் கட்டாயக்கல்வி பெறும் உரிமைச்சட்டம் என்றும் பொருள்படும்.

b) “அங்கன்வாடி” என்பது மத்திய அரசு மகளிர் – குழந்தை நல மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தின்படி அமைக்கப்பட்ட அங்கன்வாடி நிலையம் என்று பொருள்படும்.

c) “நிர்ணயிக்கப்பட்ட நாள்” என்பது 01.04.2010 ஆம் நாள் என்று பொருள்படும்.

d) “அத்தியாயம்” “பிரிவு ” “விவர அட்டவணை” என்பன முறையே சட்டத்தின் அத்தியாயம் , பிரிவு, விவர அட்டவணை என்று பொருள்படும்

e) “சிறார் ” என்பது 6 முதல் 14 வரையிலான வயதில் உள்ள சிறார் என்று பொருள்படும்.

f) “உள்ளூர் கல்வி அலுவலர்“ என்பது, வருவாய் மாவட்டத்தில், அவரவர் ஆட்சி வரம்பில் அதிகாரங்களைச் செலுத்தும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மெட்ரிகுலேஷன் (பதின்மப்) பள்ளிகளின் ஆய்வாளர், ஆங்கிலோ இந்திய பள்ளிகளின் ஆய்வாளர் மாநகராட்சிக் கல்வி அலுவலர் அல்லது தலைமைக் கல்வி அலுவலர் என்று பொருள்படும்.

g) “படிப்பு முன்னேற்ற அறிக்கை” என்பது, விரிவான மற்றும் தொடர்ந்த மதிப்பீட்டின் அடிப்படையில் சிறாரின் படிப்பு முன்னேற்ற அறிக்கை என்று பொருள்படும்.

h) “பள்ளி அமைவிடம்” என்பது சமூகத் தடைகள், இயற்கை இடர்ப்பாடுகள் அற்றபகுதி என்று பொருள்படும்.

2) இவ்விதிகளில் “படிவங்கள்” பற்றிக் குறிப்பிடப்பட்ட தகவல்கள் இணைப்பு Iஇல் குறிப்பிடப்பட்ட படிவங்களுக்கான தகவல்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

3. இங்கு பயன்படுத்தப்பட்டு பொருள் விளக்கம் அளிக்கப்படாமல், ஆனால் சட்டத்தில் பொருள் விளக்கம் அளிக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் தொடர்களும் சட்டத்தில் அவற்றிக்கு அளிக்கப்பட்ட பொருள் விளக்கத்தைக் கொண்டிருக்கும்.

## பகுதி II சிறார் இலவசக்கல்வி, மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமை

### 3 சிறப்புப் பயிற்சி

1) மாநில அரசுக்கு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றத்திற்குச் சொந்தமானதும் அவற்றால் நிருவகிக்கப்படுவதுமான ஒரு பள்ளியின் நிருவாகக்குழு, சிறப்புப் பயிற்சி தேவைப்படும் சிறார்களைக் கண்டறிந்து, பின்வரும் முறையில் அத்தகைய பயிற்சிகளை அளிக்க வேண்டும். அதாவது

a) சிறப்புப் பயிற்சி, 29ஆம் பிரிவின் (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட கல்வி அலுவலர் ஒப்புதலளித்தவாறு சிறப்பாக வடிவமைக்கப்பட்டதும் சிறார்களின் வயதிற்கு ஏற்பவும் உள்ள கற்பித்தல் உபகரணங்களின் உதவியுடன் அளிக்கப்படவேண்டும்.

b) இப்பயிற்சி, பள்ளியின் வளாகத்தில் அமைந்துள்ள வகுப்புகளில் அல்லது பாதுகாப்பான தங்குமிடங்களில் நடத்தப்படும் வகுப்புகள் வாயிலாக அளிக்கப்பட வேண்டும்.

c) இப்பயிற்சி, பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களால் அல்லது இதற்கென சிறப்பாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களால் நடத்தப்படவேண்டும்.

d) இப்பயிற்சிக் கால அளவு குறைந்தது மூன்று மாத காலமாக அமைய வேண்டும் குறிப்பிட்ட கால மதிப்பீடு மற்றும் கற்பதில் ஏற்பட்ட முனனேற்றத்தின் அடிப்படையில் இக்கால அளவின் உயரளவு இரண்டாண்டுகளுக்கு மேற்படாமல் நீட்டிக்கப்படலாம்.

2) சிறார் வயதுக்குப் பொருத்தமான வகுப்பில் சேர்க்கப்பட்டுச் சிறப்புப் பயிற்சியை முடித்த பின்னர், கல்வியிலும் செயற்பாடுகளிலும் வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களுடன் ஒருங்கிணைய இயலும் வகையில் ஆசிரியர் தொடர்ந்து சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

<u>பகுதி III – மாநில அரசு மற்றும் உள்ளூர் கல்வி அதிகாரமன்றத்தின் கடமைகள்</u>

<u>4. பகுதி அல்லது சுற்றுப்புற எல்லை</u>

1) மாநில அரசு ஒரு பகுதியில் அல்லது ஊரில் பின்வரும் நடந்து செல்லும் தொலைவுக்குள் பள்ளியை அமைக்க வேண்டும்.

a) I முதல் V வரையிலான வகுப்புகளில் பயிலும் சிறார்களைப் பொறுத்தவரையில் பள்ளி ஒரு கிலோ மீட்டர் நடந்து செல்லும் தொலைவிற்குள் இருக்க வேண்டும்.

b) VI முதல் VIII வரையிலான வகுப்புகளில் பயிலும் சிறார்களைப் பொறுத்த வரையில் 3 கிலோ மீட்டர் நடந்து செல்லும் தொலைவிற்குள் இருக்க வேண்டும்.

2) தேவைப்படும் போது மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகாரமன்றம் I முதல் V வரையிலான வகுப்புகள் உள்ள தற்போதுள்ள பள்ளிகளில் VI முதல் VII வகுப்புகள் வரை அதிகரிக்கலாம். VI ஆம் வகுப்பிலிருந்து தொடங்கும் பள்ளிகளில் தேவைப்படும் நேர்வுகளில் I முதல் V வகுப்புகள் சேர்க்கலாம்.

3) கடினமான நிலப் பகுதி, நிலச் சரிவுகள் மற்றும் வெள்ளம் ஏற்படக் கூடிய பகுதிகள், சாலைகள் இல்லாத பகுதி, பொதுவாக இளஞ் சிறார்கள் தங்கள் வீடுகளிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழியில் ஆபத்தாக உள்ள பகுதிகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் துணை விதி (1)இல் குறிப்பிடப்பட்ட பகுதியை அல்லது கட்டுப்பாட்டு அளவைக் குறைப்பதன் மூலம் அத்தகைய அபாயங்களைத் தவிர்க்கும் வகையில் பள்ளி அமைக்கப்பட வேண்டும்.

4) மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றம் கண்டறிந்தவாறு சிற்றூர்களிலிருந்து வரும் சிறார்களுக்கு துணை விதி (1)இல் குறிப்பிடப்பட்ட பகுதிக்குள் அல்லது எல்லைக்குள் பள்ளி இல்லாவிட்டால், துணை விதி (1)இல் குறிப்பிடப்பட்ட பகுதியை அல்லது எல்லைகளைத் தளர்த்தி தொடக்கக் கல்வி அளிப்பதற்காக இலவச போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதி போன்று தேவையான ஏற்பாடுகளை மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றம் செய்யவேண்டும்.

5) மக்கள் தொகை அதிகமாக உள்ள இடங்களில், மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றம் அத்தகைய பகுதிகளில் 6–14 வயதில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளை அல்லது அப்பள்ளிகளில் அதிக எண்ணிக்கையிலான பிரிவுகளை ஏற்படுத்தலாம். சாதி, இனம், மதம் அல்லது பாலின அடிப்படையில் அரசுப் பள்ளியிலோ தனியார் பள்ளியிலோ எந்த ஒரு சிறாரையும் சேர்க்க மறுக்கக் கூடாது.

6) உள்ளூர் கல்வி அதிகார மன்றம் சிறார்களைச் சேர்ப்பதற்காக அருகாமையிலுள்ள பள்ளிகளைக் கண்டறிந்து தன் அதிகார வரம்பிற்குட்பட்ட ஒவ்வொரு குடியிருப்பிலும் இத்தகவலை பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

7) பள்ளிக்குச் செல்ல இயலாமல் உள்ள மாற்றுத்திறன் உடைய சிறார்களைப் பொறுத்த வரையில் மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றம் அவர்கள் பள்ளிக்குச் சென்று, தொடக்கக் கல்வியை முடிக்க இயலும் வகையில் பொருத்தமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

8) சமூக, கலாச்சார பழக்க வழங்கங்களினால் சிறார்கள் பள்ளிக்குச் செல்ல தடை ஏற்படாமல் மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றம் கவனம் செலுத்த வேண்டும்.

<u>5. மாநில அரசின் அல்லது உள்ளூர் கல்வி அதிகாரமன்றத்தின் பொறுப்பு</u>

1) 2ஆம் பிரிவைச் சேர்ந்த (n) பகுதியின் (i) துணைப் பகுதியில் குறிப்பிடப்பட்ட மாநில அரசின் அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றத்தின் பள்ளிக்குச் செல்லும் ஒரு சிறார் 12ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின்படி, 2ஆம் பிரிவைச் சேர்ந்த (n) பகுதியின் (ii)துணைப் பகுதியில் குறிப்பிடப்பட்ட பள்ளிக்குச் செல்லும் ஒரு சிறார் 12ஆம் பிரிவைச் சேர்ந்த (1)உட்பிரிவின் (c) பகுதியின் படி 2ஆம் பிரிவைச் சேர்ந்த (n) பகுதியின் (iii) மற்றும் (iv)துணைப் பகுதியில் குறிப்பிடப்பட்ட பள்ளிக்குச் செல்லும் சிறார் ஆகியோர் இலவசமாக பாடப்புத்தகங்கள், எழுது பொருள்கள், சீருடைகள் பெறத் தகுதியானவர்களாவர்.

ஆனால், மாற்றுத்திறனுடைய சிறார் இலவச சிறப்பு கல்விக்கும் அவர்களுக்குத் தேவையான உபகரணங்களையும் பெறத் தகுதியானவர்களாவர்.

<u>விளக்கம்</u> துணை விதி (1)இன் செயல் நோக்கத்திற்காக 12 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின்படி பள்ளியில் சேர்க்கப்பட்ட சிறார், 12 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (c) பகுதியின்படி சேர்க்கப்பட்ட சிறார் ஆகியோருக்கு இலவசமானவற்றை வழங்குவதற்கு 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (n)பகுதியின் (ii) துணைப் பகுதியிலும், 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (n ) பகுதியின் (iii) மற்றும் (iv) துணைப் பகுதிகளிலும் குறிப்பிடப்பட்ட பள்ளி பொறுப்பாகும்.

2) மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றப் பள்ளிகளை தீர்மானித்து ஏற்படுத்தும் போது, பள்ளி வெகு தொலைவிலுள்ள பகுதிகளில் இருக்கும் சிறார்கள், மாற்றுத் திறனுள்ள சிறார்கள், ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிறார்கள், பொருளாதார வகையில் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த சிறார்கள் 4 ஆம் பிரிவில்

குறிப்பிடப்பட்ட சிறார்கள் ஆகியோரை நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள்ளும், அதன் பின்னர் ஒவ்வோராண்டும் பதிவு செய்யவேண்டும்.

3) மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றம், பள்ளியில் எந்த ஒரு சிறாரையும் விதி, வகுப்பு, மதம் அல்லது பாலின அடிப்படையில் தவறாகப் பேசக் கூடாது என்பதை உறுதி செய்யவேண்டும்.

4) 8 ஆம் பிரிவைச் சேர்ந்த (c)பகுதி மற்றும் 9 ஆம் பிரிவைச் சேர்ந்த (c) பகுதியின் செயல் நோக்கத்திற்காக, மாநில அரசும் உள்ளூர் கல்வி அதிகார மன்றமும், நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த சிறாரும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிறாரும் வகுப்பறை, மதிய உணவு, விளையாடுமிடங்கள், பொது குடிநீர் மற்றும் கழிவறை வசதிகளைப் பயன்படுத்துவது ஆகியவற்றில் வேறுபடுத்தப்படாமலிருப்பதை அல்லது தனிமைப் படுத்தப்படாமலிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

<u>6 உள்ளூர் கல்வி அதிகாரமன்றம் பதிவேடுகளை வைத்து வருதல்</u>

1) செயல்பாட்டு கல்வி அதிகாரமன்றம் தன்னுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியிலுள்ள வீடுகளில் கணக்கெடுப்பதன் மூலம் பிறந்ததிலிருந்து 14 வயதடையும் வரை, அனைத்து சிறார்கள் பற்றிய பதிவேட்டை வைத்து வரவேண்டும்.

2) துணை விதி (1) இல் குறிப்பிடப்பட்ட பதிவேடு ஆண்டுதோறும் நாளது வரையிலாக்கப்பட வேண்டும்.

3) மேற்சொன்ன துணை விதியில் குறிப்பிடப்பட்ட பதிவேடு பொது இடத்தில் வெளிப்படையாக வைக்கப்பட்டு 9 ஆம் பிரிவின் (e) பகுதியின் செயல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

4) மேற்சொன்ன துணை விதியில் குறிப்பிடப்பட்ட பதிவேட்டில் ஒவ்வொரு சிறாரின் பின்வரும் விவரங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

a) பெயர், பாலினம், பிறந்த நாள், பிறந்த இடம்

b) தந்தை அல்லது பாதுகாவலரின் பெயர், முகவரி, தொழில்

c) சிறார் படித்த (6 வயது வரை மழலையர் பள்ளி) அங்கன்வாடி மையம்

d) சிறார் சேர்க்கப்பட்ட தொடக்கப் பள்ளி

e) சிறாரின் தற்போதைய முகவரி

f) 6 முதல் 14 வயது வரையுள்ள சிறார்களைப் பொறுத்த வரையில் சிறார் பயிலும் வகுப்பு உள்ளூர் அதிகார மன்றத்தின் அதிகாரவரம்பில் உள்ள பள்ளியில் கல்வி இடையில் நிறுத்தப்பட்டால் அதற்கான காரணம்.

g) சிறார் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்தவாரா ?

h) சிறார் ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவரா ?

i) இடம் பெயர்ந்த மற்றும் மக்கள் தொகை எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ள இனத்தைச் சேர்ந்தவர்கள்

ii) சேர்க்கைக்குரிய வயது மற்றும்

iii) மாற்றுத்திறன் காரணமாக சிறாருக்கு சிறப்பு வசதிகள் அல்லது தங்குமிட வசதிகள் தேவைப்படுகின்றனவா ?

5) உள்ளூர் கல்வி அதிகார மன்றம், தன் அதிகார வரம்பின் கீழுள்ள பள்ளிகளில் சேர்க்கப்பட்ட அனைத்து சிறார்களின் பெயர்கள் அந்தந்த பள்ளியில் வெளிப்படையாகக் காட்டிவைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

6) சட்டத்தை உரியவாறு செயல்படுத்துவதை உறுதி செய்ய சிறார் பற்றிய தகவலைச் சேகரித்தல், அரசு சாரா அமைப்புகள் மக்கள் பங்கேற்புடன் குறித்த கால கூட்டங்களைக் கூட்டுதல் ஆகியவற்றில் உள்ளூர் கல்வி அதிகார மன்றம் உள்ளாட்சி அமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

7) உள்ளூர் கல்வி அதிகார மன்றம் தன் அதிகார வரம்பின்கீழ் உள்ள பள்ளிகளில் சேர்க்கப்படாத அனைத்து சிறார்களின் பெயர்ப்பட்டியலைக்காட்டி வைத்து தேவைப்படும்போது, அரசுசாரா அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகளுடன் சேர்ந்து மக்கள் பங்கேற்புடன் அச்சிறார்களை பள்ளியில் சேர்க்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாகம் – IV – பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்புகள்

7 நலிந்த பிரிவு மற்றும் வசதி வாய்ப்பு அற்ற குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கை

1. 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (n) பகுதியின் (iii) மற்றும் (iv) பகுதிகளில் குறிப்பிடப்பட்ட பள்ளி பிரிவு 12–ன் உட்பிரிவு (1) மற்றும் (c) பகுதியின்படி சேர்க்கப்ப.ட குழந்தைகள் ஏனைய குழந்தைகளினின்றும், வகுப்பறைகளில், தனிமை படுத்தப்படக்ககூடாது என்பதையும் மற்றும் அவர்தம் வகுப்புகள், ஏனைய குழந்தைகளுக்காக நடத்தப்படும் வகுப்புகளினின்றும் வேறுபட்ட இடங்கள் மற்றும் நேரங்களில், நடத்தப்படக்கூடாது என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

2. 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (n) பகுதியின் (iii) மற்றும் (iv) பகுதிகளில் குறிப்பிடப்பட்ட பள்ளி, உறுதி செய்து கொள்ள வேண்டியது யாதெனில், பிரிவு – 12 ன் உட்பிரிவு (1)மற்றும் (c) பகுதியியின்படி சேர்க்கப்பட்ட குழந்தைகளை, எந்த வகையிலும், அவர்தம் உரிமைகள் மற்றும் வசதிகளாகிய பாடப்புத்தகங்கள், சீருடை, நூலகம் மற்றும் தகவல், தகவல் தொழில்நுட்ப வசதிகள், பாடத்திட்டம் சாராத செயல்கள் மற்றும் விளையாட்டு இவைகளில் பிற குழந்தைகளினின்றும் வேறுபடுத்திடக்கூடாது.

3. விதி 4ன் துணை விதி (1)ல் குறிப்பிடப்பட்ட, பரப்பு அல்லது கிராம எல்லைகள் பிரிவு 12, உட்பிரிவு (1)(c) பகுதிக்கேற்பச் செய்யப்பட்ட பள்ளிச் சேர்க்கைகளுக்குப் பொருந்தும். இருந்த போதிலும், பள்ளியானது பிரிவு 12, உட்பிரிவு (c) பகுதியில் குறிப்பிடப்பட்ட குழந்தைகளுக்குத் தேவைப்படும் இருக்கைகளின் சதவீதத்தை நிறைவு செய்திட இந்தப் பரப்புகளை அல்லது எல்லைகளை மாநில அரசின் முன் அனுமதியுடன் விரிவாக்கம் செய்து கொள்ளலாம்.

8. மாநில அரசு ஒரு குழந்தைக்காகும் செலவினத்தை ஈடு செய்தல்

1. மாநில அரசு தனதுசொந்த நிதியம் மற்றும் மைய அரசால் வழங்கப்பெற்ற நிதியம் மற்றும் யாதொரு அதிகார அமைப்பினால் பிரிவு –2, பகுதி (n) துணைப்பகுதி (1)ல் குறிப்பிடப்பட்ட பள்ளிகளில், தொடக்கக் கல்விக்காக, ஆண்டு ஒன்றுக்கு செலவிடும்

மொத்தத் தொடர் செலவினத்தை தனது சொந்த அல்லது கட்டுப்பாட்டில் இயங்கும் தொடக்கப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையால் வகுத்தால் வருகின்ற தொகை, மாநில அரசு ஒரு குழந்தைக்கென செலவிடும் தொகை ஆகும்.

விளக்கம் ஒரு குழந்தைக்கென ஆகும் செலவினத்தைக் கணக்கிடுவதற்கு, பிரிவு–2 கூறு (n) துணைக்கூறு (ii) ல் குறிப்பிடப்பட்ட பள்ளிகளுக்கு, மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார அமைப்பு செலவிடும் தொகை மற்றும் இந்தப் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆகும் செலவினம் சேர்க்கப்படக்கூடாது.

2) பிரிவு–2 கூறு (n) மற்றும் கூறுகள் (iii) மற்றும் (iv) இவற்றில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு பள்ளியும், பிரிவு 12 உட்பிரிவு (2)–ன் கீழ் பெற்றிடும், செலவு ஈடுசெய்யும் தொகைக்கு, தனியான வங்கிக் கணக்கினைப் பராமரித்திடல் வேண்டும்.

3) மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். இதில் பள்ளிக் கல்விச் செயலர், நிதிச்செயலர், பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் இயக்குநர் மற்றும் மாநிலத்திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வித் திட்டம் (சர்வ சிக்ஷா அபியான்) ஆகியோர் உறுப்பினர்களாக அமைந்து, பள்ளிகளுக்கு ஒரு குழந்தைக்காகும் செலவுத் தொகையை ஈடுசெய்யும் முறைகள் குறித்து தகுந்த முடிவுகளை எடுப்பர்.

4) இச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கிய பின்னர், மூன்று மாதங்களுக்குள் இக்குழுக் கூட்டம் நடைபெறும். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் நடைபெறும் கூட்டம் அடுத்த கல்வி அமர்வுக்குரிய ஒரு குழந்தைக்காகும் செலவினத்தை மதிப்பீடு செய்திடும்.

5) மாநில திட்ட இயக்குநர் அனைவருக்கும் கல்வித்திட்டம் (சர்வ சிக்ஷா அபியான்) இந்தக்குழு எடுக்கும் முடிவின் அடிப்படையில் சட்டப்பிரிவு 12ன் கீழ் உடன் இணைந்த சட்டப்பிரிவு 8 மற்றும் 9ன்படி பள்ளிகளில் குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்ட

கட்டணத்தை ஈடு செய்வதற்காக மாவட்டக் கல்வி அலுவலருக்கு, தகவல் தெரிவித்தல் வேண்டும். இருப்பினும், இத்தகைய பள்ளியானது, ஏதேனும் நிலம், கட்டிடம், உபகரணங்கள் அல்லது வேறு வசதிகளை ஏற்கனவே பெற்றுக்கொண்டதனால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள குழந்தைகளுக்கு இலவசமாக அல்லது சலுகை வீதத்தில் கல்வி அளித்திட வேண்டிய கடப்பாடு இருந்தால், அத்தகைய பள்ளியானது, இச்சலுகை அளவில், ஈடுசெய் தொகை பெற்றிட உரிமை உடையது அன்று.

**6)** இந்த ஈடுசெய் செலவு நேரடியாக, RTGS/NEFT மாற்றம் மூலமாக, பள்ளியால் பராமரிக்கப்படும் தனியான வங்கிக்கணக்கில் கல்வி ஆண்டில், இரு தவணைகளாக வழங்கப்படும், முதல் தவணை **50%** செப்டம்பர் மாதத்திலும், மீதித்தொகை சனவரி மாதத்திலும் வழங்கப்படும்.

**7)** பள்ளி, சூலை மாதம், அதில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் பட்டியலை, உள்ளூர் கல்வி அதிகார அமைப்பிடம், சட்டப்பிரிவு **12**ன் கீழ், ஈடுசெய் செலவுத் தொகை பெறுவதற்காக சமர்த்திட வேண்டும். உள்ளூர் கல்வி அதிகார அமைப்பு, பள்ளியில் சேர்க்கப்பட்ட மாணவர் பட்டியலை, ஈடுசெய் செலவுத் தொகையின் முதல் தவணை வழங்குவதற்கு முன்பே, சரிபார்க்க வேண்டும் அல்லது சரிபார்த்திட ஏற்பாடு செய்திடல் வேண்டும். அவர், இறுதித்தவணையினை, அடுத்துவரும் சனவரித் திங்களில் ஈடு செய்திடுவார். இது, குழந்தைகள் சேர்ப்புப் பட்டியல் மற்றும், ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு மாதமும் குறைந்தது **80%** வருகை தந்ததை, சரி பார்த்த பின்னர் வழங்கப்படும்.

**8)** தனியார் பள்ளிகளிலும், சட்டப்பிரிவு **12**ன் கீழ் குறிப்பிட்ட பள்ளிகளிலும் சேர்க்கப்பட்ட மாணாக்கர்களின் பெயர்கள் பள்ளி வாரியாக மின் அணு வடிவில் பராமரிக்கப்பட்டு, விதி **9(3)**ன்படி அமைக்கப்பட்ட குழுவினால் நிர்ணயம் செய்யப்பட்ட முறையில் வெளியிடப்படும்.

9) வயதை மெய்ப்பிக்கும் ஆவணங்கள்

பள்ளிகளில், மாணவரைச் சேர்க்க பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச்சான்றுச் சட்டம் 1886 (மத்தியச் சட்டம் 6/1886) – கீழ் பிறப்புச் சான்றிதழ், கிடைக்காமல் போனால், கீழே தரப்பட்ட சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்று, அந்தக் குழந்தையின் வயதினை மெய்ப்பிக்கும் சான்றிதழாகக் கொள்ளப்படும்.

a) மருத்துவமனை அல்லது துணைச் செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர் (Mid wife) (ANM) பதிவேடு

b) அங்கன்வாடி பதிவுரு

c) பெற்றோர் அல்லது காப்பாளர் குழந்தையின் வயதை உறுதிப்படுத்தல்

10 பள்ளியில் சேர்க்க நீட்டிக்கப்பட்ட கால அளவு

1) பள்ளியில் சேர்க்க நீட்டிக்கப்பட்ட கால அளவு கல்வி ஆண்டு தொடங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாத காலமாகும்.

2) நீட்டிக்கப்பட்ட கால அளவிற்குப் பின்னர் ஒரு குழந்தை பள்ளியில் சேர்க்கப்பட்டால், அக்குழந்தை, தனிப்பயிற்சியின் உதவியுடன் தனது படிப்பினை நிறைவு செய்திட தகுதி உடையதாகும். இது பள்ளியின் தலைமை ஆசிரியரால் முடிவு செய்யப்படும்.

11. பள்ளியின் அங்கீகாரம்

1) மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார அமைப்பு ஏற்படுத்திய மற்றும் இவற்றிற்குச் சொந்தமான அல்லது கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகள் தவிர இச் சட்டம் தொடங்குவதற்கு முன்பே நிறுவப்பட்ட பள்ளிகள் ஒவ்வொன்றும் சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியதிலிருந்து மூன்று மாத கால அளவிற்குள்ளாக, பின் இணைப்பில் காட்டப்பட்டுள்ளதில், (படிவம்–1) உரிய அதிகாரியிடம், அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் வரைமுறைகளின் படி நடப்பதாகவும் பின் வரும் நிபந்தனைகளை நிறைவு செய்வதாகவும் தாமாகவே உறுதிமொழி அளிக்க வேண்டும்.

அ) சங்கப் பதிவுச் சட்டம் 1860–ன்படி, பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் பள்ளி நடத்தப்படுகிறது. (மத்தியச் சட்டம் 21/1860) அல்லது, தற்போது செயலில் இருக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொது அறக்கட்டளை.

ஆ) பள்ளியானது ஒரு தனியார், குழு, தனியார் சங்கம் அல்லது வேறு நபர்களுக்கு ஆதாயம் கிடைக்கும் நோக்கத்தில் நடத்தப்படுவது அல்ல.

இ) அரசமைப்புச்சட்டத்தில் கூறப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப பள்ளி நடத்தப்படுகிறது.

ஈ) பள்ளிக் கட்டடங்கள் அல்லது பிற உள் கட்டமைப்புகள் அல்லது மைதானங்கள், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

எ) மாநில அரசின் அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றத்தின் அதிகாரம் பெற்ற யாதொரு அதிகாரியால் ஆய்வு செய்திட பள்ளி ஆயத்தமாக வைக்கப்பட்டுள்ளது.

1) தொடக்கக் கல்வி இயக்குநர், மெட்ரிக் பள்ளிகளின் இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் ஆய்வாளர் ஆகியோருக்குத் தேவையான தகவல்கள், அறிக்கைகளை பள்ளி வழங்குகிறது. மாநில அரசு/உள்ளூர் கல்வி அதிகார மன்றம் வெளியிடும் நிபந்தனைகளைத் தொடர்ந்து பள்ளி அங்கீகாரம் பெறவும் மற்றும் பள்ளி செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளை நீக்கவும் மாநில அரசு (அ) உள்ளூர் அதிகார மன்றம் அளிக்கும் கட்டளைக் குறிப்புகளின்படி செயல்படுகின்றன.

2) படிவம் 1ல் பெறப்படுகிற ஒவ்வொரு சுய உறுதிஅளிப்பும் அது பெறப்பட்டதிலிருந்து 15 நாட்களுக்குள் பொதுமக்கள் பார்வைக்கு நேர்விற்கேற்ப, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்டக் கல்வி அலுவலர் அல்லது மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் அல்லது ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் ஆய்வாளர்களால் வைக்கப்பட வேண்டும்.

3) சுய உறுதி அளிப்பு பெறப்பட்ட மூன்று மாதங்களுக்குள் துணைவிதி (1)ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகப் பள்ளிகளால் கூறப்படுவதை, கண்டறிய மாவட்டத் தொடக்கக் கல்வி அலவலர் அல்லது மாவட்டக் கல்வி அலுவலர் அல்லது மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் அல்லது ஆங்கிலோ பள்ளிகளின் ஆய்வாளர், அத்தகைய பள்ளிகளுக்கு நேரில் சென்று ஆய்வு நடத்த வேண்டும்.

4) துணைவிதி (3)ல் கூறப்பட்டுள்ளபடி, ஆய்வு மேற்கொண்டபின் ஆய்வு அறிக்கையை நேர்விற்கேற்ப மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் அல்லது ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் ஆய்வாளர் பொது மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள விதிமுறைகள் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கும் பள்ளிகளுக்கு, ஆய்வு நடத்தப்பட்ட 30 நாட்களுக்குள் படிவம் (II) ல் அங்கீகாரம் வழங்கப்படும்.

5) துணைவிதி (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றாத பள்ளிகள், நேர்விற் கேற்ப, மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் / மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் / ஆங்கிலோ இந்திய பள்ளிகளின் ஆய்வாளர்களால் இதற்கான அரசாணை மூலமாக பட்டிய,லிடப்படும். அடுத்த 2 1/2 ஆண்டு காலத்திற்குள் இப்படிப்பட்ட பள்ளிகள் அங்கீகாரம் பெறுவதற்காக நேரடி ஆய்வு நடத்தும்படி மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் அக்கால அளவு, மேற்படிச் சட்டம் செயலுக்குவரத் தொடங்கியதிலிருந்து மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இருக்கும்.

6) சட்டம் நடைமுறைக்கு வந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் (1)ல் துணை விதி குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவு செய்யாத பள்ளிகள் தொடர்ந்து செயல்படக்கூடாது.

7) ஒருவர் பள்ளியைத் தொடங்க வேண்டும் என்றால் படிவம் (1)ல் கண்டபடி அங்கீகாரச் சான்றிதழ் பெற வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற விண்ணப்பிக்கும் முன்பாக அட்டவணைகளில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் பின்வரும் நிபந்தனைகளையும் நிறைவு செய்ய வேண்டும்.

அ) <u>கட்டண அமைப்பு</u> அங்கீகாரம் பெற்ற பள்ளிகள், தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (கட்டண வரன்முறைச்) சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழு பரிந்துரைத்தபடி, சிறப்புக் கட்டணம், பதிவுக் கட்டணம் விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை வசூலிக்க வேண்டும்.

ஆ) <u>குறைந்த அளவு உள்கட்டமைப்பு வசதிகள்</u> _அங்கீகாரம் பெற வேண்டிய பள்ளிகள் அவ்வாறு அங்கீகாரம் பெறுவதற்கான நிபந்தனையாக கீழே கண்ட குறைந்த அளவு வசதிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

**<u>இடவசதி</u>**

| இருப்பிடம் | குறைந்தபட்ச நிலப் பரப்பு |
|---|---|
| மாநகராட்சி | 6 மனைப்பிரிவுகள் (grounds) |
| மாவட்டத் தலைமையிடம் | 8 மனைப் பிரிவுகள் |
| நகராட்சி | 10 மனைப் பிரிவுகள் |
| நகரியம் | 01 ஏக்கர் |
| கிராமப் பகுதி | 03 ஏக்கர் |

இ) <u>பள்ளிக் கட்டங்கள்:</u> பள்ளிக் கட்டடங்களை, போதுமானதாகவும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் கொண்டதாகவும் திட்டமிட்டு அமைத்திருத்தல் வேண்டும். அவை சொந்தமானதாக, அல்லது வாடகையின்றி பெறப்பட்டதாக அல்லது குறைந்தது முப்பது ஆண்டுக் குத்தகைக்கு எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். அங்கீகாரம் பெற விரும்பும் பள்ளிகள், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு பொதுக் கட்டட உரிமம் வழங்கும் சட்டத்தின்படி பள்ளிக் கட்டடத்தை பொதுக் கட்டடமாகப் பயன்படுத்துவதை அனுமதி அளிக்க வேண்டும்.

பள்ளியில் நியமிக்கப்பட வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை பள்ளிக் கட்டத்தின் தன்மை, பள்ளி கட்டத்தில் அமைக்கப்படவேண்டிய வசதிகள், கற்பித்தல், கற்றல் சாதனங்கள், நூலகம், கற்பித்தல் உபகரணங்கள், போட்டி விளையாட்டுச் சாதனங்கள் ஆகியவை மேற்படிச் சட்டதின் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்கு ஏற்ப இருத்தல் வேண்டும்.

பள்ளிகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும், மேலும், அனுமதி அளிப்பற்கான விதிக்கோவையில் வரையறுக்கப்பட்ட அளவுகளின்படி, பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் மற்றும் சிறுநீர் கழிப்பிட வசதிகள் அமைக்கப்படுள்ளனவா என்பதையும் பள்ளிகள் உறுதி செய்ய வேண்டும்.

ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் மற்றும் படிகள், ஆசிரியர்களின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், 23ஆம் பிரிவைக் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும்.

12. <u>பள்ளிகளின் அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுதல்</u>

1) நேர்விற்கேற்ப, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட கல்வி அலுவலர் அல்லது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அல்லது ஆங்கிலோ இந்தியப்பள்ளிகள் ஆய்வாளர், அவருடைய சொந்த தீர்மானத்தின் பேரில் அல்லது யாதொரு நபரிடமிருந்து வரப்பெற்ற ஏதேனும் எழுத்து மூலமான முறையீட்டின் பேரில் ஒரு பள்ளி, 11ஆம் விதியின் கீழ்

அங்கீகாரம் பெற்ற அங்கீகாரம் வழங்குவதற்கான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகளை மீறியுள்ளது அல்லது, விவர அட்டவணையில் குறிப்பிப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் தரங்களை நிறைவேற்றத் தவறியுள்ளது என்று அவர் நம்புவதற்கு காரணம் இருக்கிறவிடத்து, அவர், கீழ்க்கண்ட முறையில் செயல்படுவார்.

a) அங்கீகாரம் வழங்குவதற்கான நிபந்தனையை மீறியதைக் குறிப்பிட்டு, ஒரு மாதத்திற்குள், விளக்கம் கோரி, அறிவிப்பு ஒன்றை, பள்ளிக்கு வழங்குதல்.

b) விளக்கம், மனநிறைவளிப்பதாக இல்லாத நேர்வில் அல்லது வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் விளக்கம் எதுவும் வரவில்லையெனில், நேர்விற்கேற்ப, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட கல்வி அலுவலர் அல்லது மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அல்லது ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆய்வாளர், பள்ளியைப் பார்வையிட்டு, உரிய விசாரணை செய்து, அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுவதற்கான அவர்களுடைய பரிந்துரைகளுடன், அவர்களுடைய அறிக்கையை, நேர்விற்கேற்ப, தொடக்கக் கல்வி இயக்குநர் அல்லது பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்) அல்லது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரிடம் அளிக்க வேண்டும்.

c) அறிக்கை வரப்பெற்றவுடன், நேர்விற்கேற்ப, தொடக்கக் கல்வி இயக்குநர் அல்லது பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்) அல்லது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், பள்ளிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை ரத்து செய்து ஆணை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

ஆனால், பள்ளியை விசாரிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்காமல், சம்பந்தப்பட்ட அதிகாரி, அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுவதற்கான ஆணையைப் பிறப்பிக்கக் கூடாது.

ஆங்கீகாரத்தை திரும்பப் பெறுதற்காக அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஆணை அடுத்து வருகிற கல்வியாண்டிலிருந்து உடனடியாக செல்படுத்தத்தக்கதாக இருக்கும். மேலும் அந்தப் பள்ளியைச் சேர்ந்த குழந்தைகள், சேர்த்துக் கொள்ளப்படக் கூடிய அண்டையிலுள்ள பள்ளிகளையும் அந்த ஆணை குறிப்பிட வேண்டும்.

## பாகம் V- பள்ளி நிருவாகக் குழு

### 13 பள்ளி நிவாகக் குழுவின் அமைப்பு மற்றும் அலுவல்கள்

1) பள்ளி நிருவாகக் குழு ஒன்று, இந்த விதியில், இனிமேல், மேற்சொன்ன குழு என்று குறிப்பிடப்படும். அரசிடமிருந்து உதவி பெறாத பள்ளி நீங்கலாக, ஒவ்வொரு பள்ளியிலும், வரையறுக்கப்பட்ட நாளிலிருந்து ஆறுமாதங்களுக்குள் அமைக்கப்பட வேண்டும். அது, ஒவ்வொரு மூன்றாண்டிலும் சீரமைக்கப்பட வேண்டும்.

2. மேற்சொன்ன குழுவின் எழுபத்தைந்து சதவீத உறுப்பினர்கள், குழந்தைகளின் பெற்றோர்களாக அல்லது குழந்தைகளின் பாதுகாவலர்களாக இருக்க வேண்டும்.

3. மேற்சொன்ன குழுவின் எஞ்சியுள்ள இருபத்தைந்து சதவீத உறுப்பினர்கள், கீழ்க்கண்டவர்களாக இருக்க வேண்டும் அதாவது

a) மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள், உள்ளூர் கல்வி அதிகாரமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இவர்களை, உள்ளூர் கல்வி அதிகார மன்றம் தீர்மானிக்க வேண்டும்.

b) மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள், அந்தப் பள்ளியின் ஆசிரியர்களாக இருக்க வேண்டும் இவர்களை, அந்தப் பள்ளியின் ஆசிரியர்கள் தீர்மானிக்க வேண்டும்.

c) மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள், உள்ளூர் கல்வியாளர்களாக இருக்க வேண்டும். இவர்களை, அந்தப் பள்ளியைச் சேர்ந்த குழந்தைகளின் பெற்றோர் தீர்மானிக்க வேண்டும்.

4) மேற்சொன்ன குழு, அதனுடைய விவகாரங்களை நிருவகிப்பதற்காக, தலைவர் ஒருவரையும், துணைத் தலைவரையும் பெற்றோர்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது அந்தப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் இல்லாதவிடத்து, அந்தப் பள்ளியின் மூத்த ஆசிரியர் மேற்சொன்ன குழுவில் அலுவல் நிலை உறுப்பினர் ஒருங்கிணைபாளராக இருப்பார்.

5) மேற்சொன்ன குழு மாதம் ஒருமுறையாவது கூட வேண்டும். கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்புகளும் முறையாக பதிவு செய்யப்பட்டு, பொது மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்படவேண்டும்.

6) மேற்சொன்ன குழு, 21 ஆம் பிரிவை சேர்ந்த (2) உட்பிரிவின் (a) முதல் (d) வரையிலான பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுடன், கீழ்க்காணும் அலுவல்களையும் செய்ய வேண்டும்.

a) பள்ளியின் அண்டைய பகுதியிலுள்ள மக்களுக்கு சட்டத்தில் வகை செய்துள்ளவாறான குழந்தையின் உரிமைகள் மாநில அரசு, உள்ளூர் கல்வி அதிகார மன்றம், பள்ளி, பெற்றோர் மற்றும் பாதுகாவலரின் கடமைகள் ஆகியவற்றை, எளிமையாகவும், ஆக்கபூர்வமான முறையிலும் தெரிவித்தல்.

b) 24 ஆம் பிரிவைச் சேர்ந்த (a) மற்றும் (e) பகுதிகள் மற்றும் 28 ஆம் பிரிவு ஆகியவற்றின் செயல்பாட்டை உறுதி செய்தல்

c) 27 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை நீங்கலாக ஏனைய கல்வி சாராத பணிகள், ஆசிரியர்கள் மீது சுமத்தப்படாமலிருப்பதைக் கண்காணித்தல்

d) அண்டையப் பகுதியிலுள்ள அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்படுவதையும், தொடர்ந்து பள்ளிக்கு வருவதையும் உறுதி செய்தல்

e) விவர அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் தரங்கள் பின்பற்றப்படுவதைக் கண்காணித்தல்

f) குழந்தைகளின் உரிமைகள், முரண்படுவது குறிப்பாக, குழந்தைகளை, மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் துன்புறுத்துதல், 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2)உட்பிரிவின்படி, பள்ளியில் சேர்க்க மறுத்தல் மற்றும் இலவசமாகப் பெறுவதற்கு உரிமையுள்ளவற்றை உரிய காலத்தில் வழங்க மறுத்தல் போன்ற நிகழ்வுகளை, உள்ளூர் கல்வி அதிகார மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருதல்.

g) தேவைகளைக் கண்டறிதல், திட்டம் ஒன்றைத் தயாரித்து, 4 ஆம் பிரிவின் விதிமுறைகளின் செயல்பாட்டைக் கண்காணித்தல்.

h) உடலூனமுற்ற குழந்தைகளைக் கண்டறிந்து, பள்ளியில் சேர்த்து, அவர்கள் தொடக்கக்கல்வி பயின்று, நிறைவு செய்வதை கண்கணித்தல் மற்றும் உறுதி செய்தல்.

i) பள்ளியில் மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்.

j) பள்ளியின் ஆண்டு வரவு–செலவுக் கணக்கைத் தயாரித்தல்

k) குழந்தைகள் கல்வியாண்டின் இடையில், படிப்பை நிறுத்தி விடுவதை ஆராய்வதற்காக, அதனுடைய சொந்த உறுப்பினர்கள் அடங்கிய பணிக்குழு ஒன்றை அமைத்தல், அவ்வாறு படிப்பை நிறுத்திவிடுவது பற்றி தெவித்தல், அவர்களுடைய நலனைக் கருத்திற் கொண்டு, அந்தக் குழந்தைகளை,

மீண்டும் படிப்பைத் தொடரச் செய்வதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்தல்.

7) மேற்சொன்ன குழு சட்டத்தின் கீழ் அதனுடைய அலுவல்களைச் செய்வதற்காக, வரப்பெறுகிற யாதொரு தொகையும் தனி கணக்கு ஒன்றில் வைக்கப்பட்டு, ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

8) துணை (6)ன் பகுதி (i) மற்றும் துணைவிதி (7) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குகள், மேற்சொன்ன குழுவின் தலைவர் அல்லது துணைத் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளரால் கையொப்பமிடப்பட வேண்டும். அவை, தயாரிக்கப்பட்ட ஒரு மாத கால அளவிற்குள் உள்ளூர் கல்வி அதிகார மன்றத்திற்குக் கிடைக்கும்படி செய்யப்பட வேண்டும்.

9) ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், பயன்பாட்டுச் சான்றிதழ், மானியத்தை அனுமதிக்கிற அதிகாரியிடம் அளிக்கப்பட வேண்டும்.

10 மேற்சொன்ன குழுவின் கணக்குகள், பட்டயக் கணக்கர் ஒருவரால் அல்லது உள்ளாட்சி நிதித் தணிக்கையாளரால் அல்லது கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர் ஒருவரால் தணிக்கை செய்யப்பட வேண்டும்

<u>14 பள்ளிகளின் மேம்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்</u>

1) பள்ளி நிருவாகக்குழு, சட்டத்தின் கீழ், அது, முதலாவதாக அமைக்கப்பட்ட நிதியாண்டு முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னராவது, பள்ளி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கவேண்டும்.

2) பள்ளி மேம்பாட்டுத் திட்டம், மூன்று ஆண்டு துணைத்திட்டங்களைக் கொண்டு மூன்றாண்டுத் திட்டமாக இருக்க வேண்டும்.

3) பள்ளி மேம்பாட்டுத் திட்டம், கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும், அதாவது

a) ஒவ்வொரு ஆண்டுக்கான வகுப்புவாரியான சேர்க்கையின் மதிப்பீடுகள்.

b) விவர அட்டவணையில் குப்பிடப்பட்டுள்ள வரையறைகளின்படி, I முதல் V வரையிலான வகுப்புகள், VI முதல் VIII வரையிலான வகுப்புகள் என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாகத் தேவைப்படுகிற தலைமையாசிரியர்கள், பாட ஆசிரியர்கள், பகுதி நேர பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை.

c) விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் தரங்களின்படி கணக்கீடு செய்யப்பட்ட கூடுதல் அடிப்படைக்கட்டமைப்பு வசதி மற்றும் சாதனங்களின் தேவை.

d) 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு பயிற்சி வசதியை அளித்தல், இலவச பாடநூல்கள், சீருடைகள் போன்ற குழந்தைகளுக்கான உரிமைகள், சட்டத்தின் கீழ், பள்ளியின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக தேவைப்படுகிற ஏனைய கூடுதல் தொகை ஆகியவை உட்பட மேலே (b) மற்றும் (c) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிதித் தேவை.

4) பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்சொன்ன குழுவின் தலைவர் அல்லது துணைத்தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பபாளர் கையொப்பமிட்டு அது எந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டதோ அந்த நிதியாண்டு முடிவடைவதற்கு முன்னர், நேர்விற்கேற்ப, மாநில அரசிடம் அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றத்திடம் அளிக்க வேண்டும்.

## பாகம் VI– ஆசிரியர்கள்

### 15. குறைந்த அளவு தகுதிகள்

1) 23 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட கல்வி அதிகாரி, அவ்வாறு குறிப்பிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள், ஒரு ஆசிரியராக நியமிக்கப்படுவதற்குத் தகுதிவாய்ந்த ஒரு நபருக்கான குறைந்த அளவு தகுதிகளை, வரையறுக்க வேண்டும்.

2) கல்வி அதிகாரி வரையறுத்த குறைந்த அளவு தகுதிகள் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (n) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பள்ளிக்கும் பொருந்தத்தக்கதாக இருக்கும்.

### 16. குறைந்த அளவு தகுதிகளைத் தளர்த்துதல்

1) சட்டம் செயல்படத் தொடங்கிய நாளிலிருந்து ஆறுமாதங்களுக்குள், 2 ஆம் பிரிவின் (n) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கான விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின்படி, ஆசிரியர்களுக்கான தேவையை, மாநில அரசு மதிப்பீடு செய்ய வேண்டும்.

2) துணைவிதி (1)ன் கிழ் மதிப்பீடு செய்யப்பட்ட ஆசிரியர்களின் தேவை தொடர்பாக 15 ஆம் விதியின் (1) துணைவிதியின் கீழ் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு தகுதிகளைப் பெற்றுள்ள நபர்கள், போதிய எண்ணிக்கையில் கிடைக்காவிட்டால், மாநில அரசு, சட்டம் செயல்படத் தொடங்கிய ஓராண்டிற்குள், வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு தகுதியைத் தளர்த்துமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

3) சட்டம் செயல்படத் தொடங்கி ஆறு மாதங்கள் முடிவடைந்தவுடன், 23 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கிழ் குறிப்பிடப்பட்ட கல்வி அதிகாரி, குறைந்த அளவு தகுதிகளைப் பெற்றிராத யாதொரு நபரையும், யாதொரு பள்ளிக்கு, ஆசிரியராக நியமிக்கக் கூடாது.

4) சட்டம் செயல்படத் தொடங்கிய ஆறுமாதங்களுக்குள், ஆசிரியராக நியமிக்கப்பட்ட ஒரு நபர், மேனிலைப்பள்ளிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான கல்விச் சான்றிதழுக்குக் குறையாத கல்வித் தகுதிகளையாவது பெற வேண்டும்.

<u>17. குறைந்த அளவு தகுதிகளைப் பெறுதல்</u>

1) இந்தச் சட்டம் செயலுக்கு வரத் தொடங்குகிறபோது, 15 ஆம் விதியின் (2) துணை விதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள குறைந்த அளவு தகுதிகளைப் பெற்றிராத 2 ஆம் பகுதியைச் சேர்ந்த (n) பகுதியின் (i) மற்றும் (iii) துணைப்பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களும், சட்டம் செயலுக்கு வரத் தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டு கால அளவிற்குள் அத்தகைய குறைந்த அளவு தகுதிகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, போதிய ஆசிரியர் கல்வி வசதிகளை, மாநில அரசு அளிக்க வேண்டும்.

2) இந்தச் சட்டம் செயலுக்குவரத் தொடங்குகிற போது, 15 ஆம் விதியின் (2) துணைவிதியின் கீழே வரையறுக்கப்பட்டுள்ள குறைந்த அளவு தகுதிகளைப் பெற்றிராத 2 ஆம் பகுதியைச் சேர்ந்த (n) பகுதியின் (ii) மற்றும் (iv) துணைப் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள

யாதொரு பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்கு, மேற்படி சட்டம் செயலுக்குவரத் தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டு கால அளவிற்குள், அத்தகைய குறைந்த அளவு தகுதிகளைப் பெறுவதற்கு, அத்தகைய பள்ளியின் நிருவாகம் உதவ வேண்டும்.

18 ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் படிகள், பணி நிபந்தனைகள்

1) மாநில அரசு, தொழில் முறையில் சிறப்புப் பயிற்சி பெற்ற மற்றும் நிலையான பதவித்தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை உருவாக்குவதற்காக, ஆசிரியர்களின் பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், சம்பளம் மற்றும் படிகளை அறிவிக்கையிட வேண்டும்.

2) குறிப்பாகவும், துணைவிதி (1)க்கு பாதகமின்றியும், பணி வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், கீழ்க்கண்டவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் அதாவது

a) 21 ஆம் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட பள்ளி நிருவாகக் குழுவிற்கு, ஆசிரியர்கள் பதில் சொல்லும் பொறுப்பு

b) ஆசிரியர் தொழிலில் உள்ள ஆசிரியர்களின் நீண்டகால அக்கறையை ஊக்குவிப்பதற்கான வழிவகைகள்.

3) 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு பயிற்சி அளிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் உட்பட, ஆசிரியர்களின் ஊதிய விகிதம், படிகள், மருத்துவ வசதிகள், ஓய்வூதியம், பணிக்கொடை வருங்கால வைப்புநிதி மற்றும் வரையறுக்கப்பட்ட ஏனைய பயன்கள்,

வழக்கமான ஆசிரியர்களுக்கு இருப்பதைப் போன்று இருக்க வேண்டும் மற்றும் இதைப்போன்று பணி மற்றும் அனுபவத்திற்கு வழங்கப்படுகிற பயன்களுக்கு இணையாகவும் இருக்க வேண்டும்.

19. ஆசிரியர்கள் ஆற்றுகிற கடமைகள்

1) ஒவ்வொரு குழந்தையின் படிப்படியான கல்வி முன்னேற்றம் குறித்த அறிக்கை அடங்கிய கோப்பு ஒன்றை, ஆசிரியர் வைத்துவர வேண்டும். இது, தொடக்கக் கல்வியை முடித்தற்கான சான்றிதழை வழங்குவதற்கான அடிப்படையாக இருக்கவேண்டும்.

2) 24 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) முதல் (e) வரையிலான பகுதிகளில் குறிப்பிடப்பட்ட அலுவல்களுடன் ஆசிரியர் ஒருவர், கீழ்க்காணும் கடமைகளையும் ஆற்ற வேண்டும்

a) பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றல்

b) பாடமுறையை உருவாக்குதல், பாடத்திட்டம், பயிற்சி முறை, பாடநூல் ஆகியவற்றை மேட்படுத்தல் முதலியவற்றில் பங்கேற்றல்.

20. மாணாக்கர் – ஆசிரியர் விகிதாச்சாரத்தை பேணுதல்

1) பள்ளி ஒன்றில், ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையானது நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நேர்விற்கேற்ப மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகாரமன்றத்தால் அறிவிக்கையிடப்படவேண்டும்.

2) ஆனால், நேர்விற்கேற்ப மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றம் அத்தகைய அறிவிக்கை வெளியிடப்பட்ட மூன்று மாதங்களுக்குள், (1) துணை விதியில் குறிப்பிடப்பட்ட அறிவிக்கை

வெளியிடுவதற்கு முன்னர் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையினை காட்டிலும் மிகையான எண்ணிக்கை கொண்டுள்ள பள்ளிகளின் ஆசிரியர்களை மறுநியமனம் செய்ய வேண்டும்.

3) மாநில அரசு அல்லது உள்ளூர் கல்வி அதிகார மன்றத்தின் யாதொரு நபர், 25 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் விதித்துறைகளை மீறுவாராயின், தனிப்பட்ட முறையில் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அவர் உட்பட்டவராவார்.

<u>பாகம் VII – பாடத்திட்டம் மற்றும் தொடக்க கல்வியினை முடித்தல்</u>

<u>21. கல்வி அதிகார மன்றம்</u>

1) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் செயல்நோக்கத்திற்காக, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கக கல்வி அதிகார மன்றமாக இருக்கும்.

2) பாடத்திட்டம் மற்றும் மதிப்பாய்வு நடைமுறையினை வரையறுக்கிற போது கல்வி அதிகார மன்றமானது பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்.

a) பொருத்தமான வயதிற்கான பாடமுறை மற்றும் பாடபுத்தகங்கள் மற்றும் ஏனைய கற்பிப்பதற்கான சாதனங்களை வகுக்க வேண்டும்

b) பணியிடை ஆசிரியர் பயிற்சி வடிவமைப்பினை மேம்படுத்த வேண்டும், மற்றும்

c) தொடர்ச்சியான மற்றும் விரிவான மதிப்பாய்வினை நடைமுறை படுத்துவதற்கான வழிக்காட்டிக் குறிப்புகளை தயாரிக்க வேண்டும்.

d) குழந்தைகளின் கற்றுக் கொள்ளும் திறன் அளவுகளுக்கான பதில் சொல்லும் பொறுப்பு அளவு கோலுடன் தனிநபர்கள்

மற்றும் நிறுவனங்களில் செயல்பாட்டு குறியீடுகளை மேம்படுத்த வேண்டும்.

e) தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களில் செயலாக்க மதிப்பீட்டினை குறிப்பிட்ட கால அளவிற்கொரு முறை மேற்கொள்ள வேண்டும்.

f) கொள்கைகள், திட்டங்கள், பாடத்திட்டம், குழந்தைகளின் கற்றல் திறன் முதலியன குறித்த ஆராய்ச்சிகள்/ ஆய்வுகளை தொடங்கி வைத்து மேற்கொள்ள வேண்டும்.

g) (1) துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி அதிகாரமன்றம், பள்ளி கல்வி மதிப்பீட்டு செயல்முறையினை முழுமையாக வடிவமைத்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில் செயல்படுத்த வேண்டும்.

## 22. சான்றிதழ் வழங்குதல்

1) தொடக்கக் கல்வி முடிக்கப்பட்டதற்கான சான்றிதழ், தொடக்கக் கல்வி முடிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள், இணைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள படிவம் – IIIஇல் பள்ளியில் வழங்கப்படவேண்டும்.

2) (1) துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழிலில், குழந்தையின் கல்வி முன்னேற்ற அறிக்கை இடம் பெற வேண்டும்.

## பாகம் VIII – குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு

### 23. குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பிற்காக மாநில ஆணையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செயல்பாடுகள்

1) குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையம் அமைப்பதற்கு மாநில அரசு 31 ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவின் கீழ் சொல்லியுள்ளவாறாக, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கலாம்.

2) மாநில அரசு, குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையத்தை ஏற்படுத்துகின்ற வரையில், இச்சட்டம் செயல்படத் தொடங்கிய ஆறு மாதங்களுக்குள் அல்லது குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையம் அமைக்கப்பட்ட நாள், ஆறு மாதங்களுக்குள் இவற்றில் எது முந்தையதோ அதற்குள் 31 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களை மேற்கொள்வதற்காக, கல்வி பாதுகாப்பு உரிமைக்கான அதிகாரமன்றம் (இனிமேல், இந்த விதியில் க.பா.உ..அ என குறிப்பிடப்படும்) என்ற இடைக்கால அதிகார மன்றம் ஒன்றை அமைக்க வேண்டும்.

3) மேற்சொன்ன அதிகாரமன்றத்தில் பின்வரும் நபர்கள் இருப்பர். அவர்கள் வருமாறு

a) சிறந்த கல்வியாளராக இருக்கின்ற அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்துள்ள அல்லது குழந்தைகள் உரிமைகளை மேம்படுத்துவதில் முனைப்பாக பணியாற்றியுள்ள நபரை தலைவராகவும்,

b) இரண்டு உறுப்பினர்களும், இவர்களில் ஒருவரேனும் மகளிராக இருக்க வேண்டும். அவர், பின்வரும் துறைகளில் புகழ், திறமை, நேர்மை, நிலை மற்றும் அனுபவம் மிக்கவராக இருக்க வேண்டும்.

i) கல்வி;

ii) குழந்தை நல பராமரிப்பு மற்றும் குழந்தை மேம்பாடு;

iii)இளம்பருவத்தினர் நீதி அல்லது புறந்தள்ளப்பட்ட குழந்தைகள் அல்லது சராசரி குழந்தைகள் அல்லது ஏலாமையுற்ற குழந்தைகள்;

iv) குழந்தை தொழிலாளர் ஒழிப்பு அல்லது துன்பத்திலுள்ள குழந்தைகளுடன் பணிபுரிந்தமை;

v) குழந்தை உளவியல் அல்லது சமூகவியல் அல்லது

vi) சட்டபூர்வ தொழில்

4) குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையத்தினை அமைத்த பின்னர், உடனடியாக, REPA-வின் பதிவுருக்கள் மற்றும் உடமைகள் அனைத்தும் அதற்கு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

5) நேர்விற்கேற்ப குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையம் அல்லது மேற்சொன்ன அதிகார மன்றம் அதன் செயல்பாடுகளை செயல்படுத்துகின்றபோது, மாநில ஆலோசனை குழுவால் அனுப்பப்பட்ட விவகாரங்களிலும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

6) இச்சட்டத்தின் கீழ் செயல்படுவதற்கு, நேர்விற்கேற்ப, குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையத்திற்கு அல்லது மேற்சொன்ன அதிகார மன்றத்திற்கு மாநில அரசு ஆதாரத்திற்கு வகை செய்ய வேண்டும்.

7) வேண்டிய மாறுதல்களுடன், வரையறை நிபந்தனைகளுடன் கூடிய 2006 ஆம் ஆண்டு குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான தேசிய ஆணையத்தின் விதிகள், ஆணையத்தின் தலைவருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

24. <u>குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையத்தில் புகார்கள் அளிப்பதற்கான முறை:</u>

நேர்விற்கேற்ப, குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையம் அல்லது மேற்சொன்ன அதிகாரமன்றம், குழந்தை நல அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தலாம். இந்த

அமைப்பு, குழந்தை உரிமைகள் மீறல் தொடர்பான புகார்களை சட்டத்தின் கீழ் பதிவு செய்யும். ஒளிவுமறைவற்ற கணினி ஏற்பாடு முறை ஒன்றின் வாயிலாக கண்காணிக்கப்படலாம்.

25. <u>மாநில ஆலோசனை குழு ஏற்படுத்தலும் செயல்பாடுகளும்:</u>-

1) மாநில ஆலோசனை குழுவில், தலைவர் ஒருவருடன் பதினான்கு உறுப்பினர்கள் இருப்பர்.
2) கல்வித்துறைக்கு பொறுப்பு வகிக்கின்ற அமைச்சர், இந்த மாநில ஆலோசனை குழுவின் அலுவல் நிலை தலைவராக இருப்பார்.
3) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, தொடக்கக்கல்வி மற்றும் குழந்தை மேம்பாட்டில் அறிவும் நடைமுறை அனுபவமும் கொண்ட நபர்களிலிருந்து இந்த மாநில ஆலோசனை குழுவிற்கு உறுப்பினர்கள் மாநில அரசால், நியமிக்கப்பட வேண்டும்.
    a) ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்த நபர்களிலிருந்து மூன்று உறுப்பினர்களேனும் நியமிக்கப்பட வேண்டும்.
    b) சிறப்பு கவனிப்பு தேவைப்படுகின்ற குழந்தைகளின் கல்வியில், சிறப்பு அறிவும் நடைமுறை அனுபவமும் கொண்டுள்ள நபர்களிலிருந்து ஒரு உறுப்பினரேனும் நியமிக்கப்பட வேண்டும்.
    c) தொடக்கக்கல்விக்கு முந்தைய கல்வி நிலையில் (மழலையர் கல்வி) சிறப்பு அறிவு கொண்டுள்ள நபர்களிலிருந்து ஒரு உறுப்பினரேனும் நியமிக்கப்பட வேண்டும்.
    d) ஆசிரியர் கல்வித் துறையில் சிறப்பு அறிவும் நடைமுறை அனுபவமும் கொண்டுள்ள நபர்களிலிருந்து ஒரு உறுப்பினரேனும் நியமிக்கப்பட வேண்டும்.

e) மாநில ஆலோசனை குழுவில், பின்வருபவர்கள் அலுவல் நிலை உறுப்பினர்களாக இருப்பர்:

I. அரசுச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை

II. தலைவர், குழந்தை உரிமைகள் பாதுகாப்பிற்கான மாநில ஆணையம்;

III. பள்ளிக்கல்வி இயக்குநர்;

IV. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்;

V. தொடக்கக்கல்வி இயக்குநர்;

VI. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் இயக்குநர்;

VII. அனைவருக்கும் கல்வி திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர், இந்த மாநில ஆலோசனை குழுவின் அலுவல் வழி உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

f) உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், மகளிராக இருக்க வேண்டும்.

4) இந்த மாநில ஆலோசனை குழு கேட்டுக் கொள்கிறவாறு ஏனைய சம்பந்தப்பட்ட துறைகளின் பிரதிநிதிகளை சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கலாம்.

5) மாநில ஆலோசனை குழுவின் கூட்டங்களுக்கும், அதன் ஏனைய செயல்களுக்கும், தொடக்கக்கல்வித் துறை போக்குவரத்து விதிகளுக்கு வகை செய்ய வேண்டும்.

6) மாநில ஆலோசனை குழுவானது, பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயல்களை மேற்கொள்ள வேண்டும். அவையாவன:-

a) பின்வருவனவற்றை ஆய்வு செய்ய வேண்டும்.

I. விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளையும் நிலைகளையும் ஆய்வு செய்தல்

II. ஆசிரியர் தகுதிகள் மற்றும் பயிற்சிகள் பின்பற்றபடுவதை ஆய்வு செய்தல் மற்றும்

III. 29 ஆம் பிரிவு செயல்படுத்தப்படுவதை ஆய்வு செய்தல்

b) இச்சட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்துவதற்காக ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் தொடங்குதல்;

c) இச்சட்டத்தினை செயல்படுத்துவதற்காக, விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் சாதகமான சூழ்நிலையினை உருவாக்குவதிலும், பொதுமக்கள், ஊடகம் மற்றும் மாநில அரசுக்கிடையே இணைப்புப் பாலமாக செயல்படுதல்

5) மாநில ஆலோசனை குழுவின் அலுவல்களை மேற்கொள்வதற்கான நடைமுறை பின்வருமாறு இருக்கவேண்டும்:

i) தலைவர், பொருத்தமென கருதுகின்ற அத்தகைய சமயங்களில் குழு, தவறாமல் கூட்டம் நடத்த வேண்டும். ஆனால் அதன் கடைசி கூட்டத்திற்கும் அடுத்து வருகின்ற கூட்டத்திற்கும் இடையே மூன்று மாதகால இடைவெளி இருக்கக் கூடாது.

ii) இக்குழு கூட்டம், தலைவரால் வரையறை செய்யப்பட வேண்டும். யாதொரு காரணத்தால் இக்குழுக் கூட்டத்தில் தலைவரால் பங்கேற்க முடியவில்லையெனில், அந்த கூட்டத்தை தலைமை தாங்குவதற்கு குழு உறுப்பினர் ஒருவரை அவர் நேமகம் செய்யலாம். குழு கூட்டத்திற்கு 50% உறுப்பினர்களேனும் வந்திருந்தார்கள் எனில், குழு கூட்டம் நடப்பதற்குத் தேவையாக நிர்ணயிக்கப்பட்ட நபர்களின் குறைந்தளவு எண்ணிக்கையானது முழுமையானதாக கருதப்படும்.

6) மாநில ஆலோசனை குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கான நிபந்தனை வரையறைகள் பின்வருமாறு:

a) உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் பதவி வகித்து வருகின்ற நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவிற்கு அப்பதவியினை வகித்து வரவேண்டும்;

ஆனால் எந்தவொரு உறுப்பினரும், இரண்டு தடவைகளுக்கு மேல் அத்தகைய பதவியினை வகித்து வரக்கூடாது.

b) உறுப்பினரின் தவறான நடத்தை நிரூபிக்கப்பட்டமை அல்லது திறமையின்மை, அல்லது பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் காரணமாக, மாநில அரசின் ஆணை ஒன்றினால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படலாம்.

i) நொடித்தவராக தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின், அல்லது

ii) செயல்பட மறுப்பின் அல்லது செயல்படுவதற்கு திறனற்றவராக இருப்பின், அல்லது

iii) தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் மனநிலை சரியில்லாதவராக அறிவிக்கப்பட்டிருப்பின் அல்லது

iv) பொது நலனுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில், பதவியில் அவர் தொடர்ந்து இருப்பதற்காக அவருடைய பதவியினை தவறாக பயன்படுத்தியிருப்பின் அல்லது

v) தகுதிவாய்ந்த நீதி மன்றத்தால் குற்றச் செயலுக்கு குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின், அல்லது

vi) குழுவிடமிருந்து அனுமதி பெறாமல், குழுவின் தொடர்ச்சியான இரண்டு கூட்டங்களுக்கு வராமலிருப்பின்.

c) எந்தவொரு உறுப்பினருக்கும் அவருடைய தரப்பில் போதுமான வாய்ப்பு அளிக்கப்படாமல், அவரை பதவியிலிருந்து நீக்க முடியாது.

d) உறுப்பினர் மரணமடைந்தாலும் பதவி விலகல் அல்லது வேறுவகையிலான காரணத்தாலும், உறுப்பினர்கள் பதவிகளில் காலியிடம் ஏற்பட்டிருப்பின், (3) ஆம் துணை விதியின் விதித்துறைகளின்படி, புதிதாக நியமனம் செய்வதன் வாயிலாக 120 நாட்களுக்குள் அத்தகைய காலியிடங்கள் நிரப்பப்படவேண்டும்.

e) குழுக்கள் மற்றும் ஆணையங்களின் அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் அதேப் போன்ற பதவித்தரங்கள் கொண்ட நபர்கள் தொடர்பாக, மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி, அலுவலக சுற்றுப் பயணங்கள் மற்றும் பயணங்களுக்கான பயணம் மற்றும் தினப்படிகளை ஈடுசெய்வதற்கு, குழுவின் உறுப்பினர்கள் உரிமையுடையவராவார்.

<u>26. அச்சு மற்றும் ஊடகம் வாயிலாக சட்டம்/விதிகளை விளம்பரப்படுத்தல்:-</u>

மாநிலம், இச்சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் இதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி, அச்சு மற்றும் மின்னணு ஊடகம் வாயிலாக பெருமளவில் விளம்பரப்படுத்த வேண்டும்.

## இணைப்பு

## படிவம்–I

பள்ளி அங்கீகாரம் பெறுவதற்கான சுய அறிவிப்பு மற்றும் விண்ணப்பம்

(11 ஆம் விதியைச் சேர்ந்த (1) ஆம் துணை விதியைக் காண்க)

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர்
(மாவட்டம் & மாநிலத்தின் பெயர்)

ஐயா,

2009 ஆம் ஆண்டு குழந்தைகள் இலவசக் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின், அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள நெறிகள் மற்றும் தரங்களுக்கு இசைவாக இருத்தல் தொடர்பான ஒரு சுய அறிவிப்பையும், ————————————— (பள்ளியின் பெயர்) அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு உரிய வடிவிலான ஒரு விண்ணப்பப் படிவத்தையும், 20——————ஆம் ஆண்டில் பள்ளி தொடங்கப்பட்டதிலிருந்து இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

இணைப்புகள்:

நிருவாகக்குழுத் தலைவர்/மேலாளர்

இடம்:

நாள்:

A. <u>பள்ளி விவரங்கள்:</u>

1. பள்ளியின் பெயர்

2. கல்வியாண்டின் பருவம்

3. மாவட்டம்

4. அஞ்சல் முகவரி

5. கிராமம்/நகரம்

6. வட்டம்

7.அஞ்சல் குறியீட்டெண்

8. தொலைபேசி எண் (எஸ்.ட்டி.டி.எண்)

9. நிகரி எண்(ஃபேக்ஸ் எண்)

10. மின்னஞ்சல் முகவரி (ஏதேனுமிருப்பின்)

11. அருகில் உள்ள காவல் நிலையம்

B.<u>பொதுத்தகவல்கள்:</u>

1. தொடங்கப்பட்ட ஆண்டு

2. முதன்முதலில் பள்ளி திறக்கப்பட்ட நாள்

3. அறக்கட்டளை/சங்கம்/நிருவாகக்குழுவின் பெயர்

4. அறக்கட்டளை/சங்கம்/நிருவாகக்குழு
பதிவு செய்யப்பட்டுள்ளதா

5. அறக்கட்டளை/சங்கம்/நிருவாகக்குழு
பதிவு செய்யப்பட்டிருப்பது எப்போதுவரையில்
செல்திறனுள்ளது என்ற கால அளவு

6. அறக்கட்டளை/சங்கம்/நிருவாகக்குழுவுக்கு
பள்ளி உடைமையானது அல்ல என காட்டுவதற்கான
ஆதாரம் உள்ளதா? அதற்கு ஆதராவாக உறுப்பினர்களின்
பட்டியல் அவர்களது முகவரிகளுடன் ஒப்புதல் வாக்குமூலம் (நகலில்)

7. பள்ளியின் மேலாளர்/தலைவர்/அமர்வுத் தலைவரின் பெயர் மற்றும் அதிகாரப்பூர்வ முகவரி

பெயர்

பதவிப்பெயர்

முகவரி

தொலைபேசி எண் (அலுவலகம்)

(இருப்பிடம்)

8. கடந்த மூன்றாண்டுகளில் மொத்த வரவு மற்றும் செலவு, உபரி/பற்றாக்குறை

| ஆண்டு | வருமானம் | செலவு | உபரி/பற்றாக்குறை |
|---|---|---|---|
| | | | |

C. பள்ளி வளாகத்தின் தன்மை

1. பயிற்று மொழி

2. பள்ளியின் வகை (எந்த வகுப்பிலிருந்து எந்த வகுப்புவரையில் உள்ளது என்பதை குறிப்பிடவும்)

3. உதவி பெறும் பள்ளியாயின்,
முகவரமைப்பின் பெயர்,
உதவித் தொகையின் சதவீதம்

4. பள்ளி அங்கீகாரம் பெற்றுள்ளதா ?

5. ஆம் எனில், எந்த அதிகார மன்றத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது

அங்கீகார எண்:

6. பள்ளி சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறதா அல்லது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறதா?

7. பள்ளிக் கட்டடங்கள் அல்லது ஏனைய கட்டட அமைப்புகள் அல்லது விளையாட்டுத் திடல்கள் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப்படுகிறதா?

8. பள்ளியின் மொத்த பரப்பளவு

9. பள்ளியின் கட்டுமானப் பரப்பளவு

D. மாணவர் சேர்க்கைப்பதிவு விவரங்கள்

| வ.எண். | வகுப்பு | பிரிவுகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

1. மழலையர்

2. I ஆம் வகுப்பு

3. II ஆம் வகுப்பு

4. III ஆம் வகுப்பு

5. IV ஆம் வகுப்பு

6. V ஆம் வகுப்பு

7. VI ஆம் வகுப்பு

8. VII ஆம் வகுப்பு

9. VIII ஆம் வகுப்பு

E. அடிப்படை கட்டமைப்பு வசதி குறித்த விவரங்களும், துப்புரவு நிலைகளும்

| வ.எண். | அறைகள் | எண்ணிக்கை | சராசரி அளவு |
|---|---|---|---|

1. வகுப்பறை

2. அலுவலக அறை – கிடங்கு – தலைமை ஆசிரியர் அறை

3. சமையல் அறை & பண்டக சாலை

F. <u>ஏனைய வசதிகள்</u>

1. அனைத்து வசதிகளும் தடையின்றி
எளிதாகக் கிடைக்கிறதா?

2. கற்றல், கற்பித்தல் சாதனங்கள்
(பட்டியல் இணைக்கவும்)

3. விளையாட்டுச் சாதனங்கள்
(பட்டியல் இணைக்கவும்)

4. நூலக வசதிகள்

- புத்தகங்கள் (புத்தகங்களின் எண்ணிக்கை)
- குறித்தகால வெளியீடுகள் /செய்தித்தாள்கள்

5. குடிநீர் வசதிகள் வகை மற்றும் எண்ணிக்கை

6. சுகாதார வசதிகள் (கழிவு அறை)

(i) மேல்நாட்டு கழிவறைகள் மற்றும்
சிறுநீர் கழிப்பிட வசதி

(ii) மாணவர்களுக்கென தனியாக உள்ள
சிறுநீர் கழிப்பிடம்/கழிவறைகளின் எண்ணிக்கை

(iii) மாணவிகளுக்கென தனியாக உள்ள
சிறுநீர் கழிப்பிடம்/கழிவறைகளின்
எண்ணிக்கை

G. ஆசிரியர் பணியிடங்கள் பற்றிய விவரம்
(தொடக்கப்பள்ளி/உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் பற்றிய விவரம்)
(ஒவ்வொரு ஆசிரியர் குறித்த விவரங்கள் தனித்தனியாக அளிக்கவும்)

| | | |
|---|---|---|
| ஆசிரியர் பெயர் (1) | தந்தை/கணவர்/மனைவி பெயர் (2) | பிறந்த தேதி (3) |
| கல்வித் தகுதி (4) | தொழிற்கல்வி (5) | பணிநியமன நாள் (6) |
| கற்பிக்கும் வகுப்பு (7) | கற்பித்தலில் அனுபவம் (8) | பயிற்சி பெற்றவரா ? (அ) பயிற்சி பெறாதவரா? (9) |
| சம்பள விகிதம் (10) | மொத்த சம்பளம் (மாதம் ஒன்றுக்கு) (11) | |

2. <u>தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி இரண்டிலும் கற்பித்தல்</u>
<u>(ஒவ்வொரு ஆசிரியரின் விவரமும் தனித்தனியாக இணைக்கவும்)</u>

| | | |
|---|---|---|
| ஆசிரியரின் பெயர் (1) | தந்தை/கணவர் பெயர் (2) | பிறந்த தேதி (3) |
| கல்வித் தகுதி (4) | தொழிற்கல்வி (5) | பணிநியமன நாள் (6) |
| கற்பிக்கும் வகுப்பு (7) | கற்பித்தல் அனுபவம் (8) | பயிற்சி பெற்றவர் (அ) பயிற்சி பெறாதவர் (9) |
| சம்பள விகிதம் (10) | மொத்த சம்பளம் (மாதம் ஒன்றுக்கு) (11) | |

3. <u>உயர்நிலைப்பள்ளியிலுள்ள ஆசிரியர்கள்</u>

| | | |
|---|---|---|
| ஆசிரியரின் பெயர் (1) | தந்தை/கணவர் பெயர் (2) | பிறந்த தேதி (3) |
| கல்வித் தகுதி (4) | தொழிற்கல்வி (5) | பணிநியமன நாள் (6) |
| கற்பிக்கும் வகுப்பு (7) | கற்பித்தல் அனுபவம் (8) | பயிற்சி பெற்றவர் (அ) பயிற்சி பெறாதவர் (9) |
| சம்பள விகிதம் (10) | மொத்த சம்பளம் (மாதம் ஒன்றுக்கு) (11) | |

4. <u>தலைமை ஆசிரியர்/பள்ளி முதல்வர்</u>

| ஆசிரியரின் பெயர் | தந்தை/கணவர் பெயர் | பிறந்த தேதி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்வித் தகுதி | தொழிற்கல்வி | பணிநியமன நாள் |
| (4) | (5) | (6) |
| கற்பிக்கும் வகுப்பு | கற்பித்தல் அனுபவம் | பயிற்சி பெற்றவர் (அ) பயிற்சி பெறாதவர் |
| (7) | (8) | (9) |
| சம்பள விகிதம் | மொத்த சம்பளம் (மாதம் ஒன்றுக்கு) | |
| (10) | (11) | |

11. <u>பாடத்திட்டமும், பாடமுறையும்:</u>

1. ஒவ்வொரு வகுப்பிலும் பின்பற்றப்படும்
   பாடத்திட்டம், பாடமுறை பற்றிய விவரங்கள்

2. மாணவர்கள் மதிப்பீட்டு முறை
   (VIIIஆம் வகுப்பு வரையில்)

3. பள்ளியில் படிக்கும் மாணவர்கள்
   எட்டாம் வகுப்பு வரையில் ஏதேனும்
   வாரியத் தேர்வு எழுத வேண்டியுள்ளதா)

1. பள்ளிக் கட்டணம்

| தொ.எண். | வகுப்பு | கட்டணம் |
|---|---|---|
| 1. | மழலையர் வகுப்பு | |
| 2. | 1 ஆம் வகுப்பு | |
| 3. | 2 ஆம் வகுப்பு | |
| 4. | 3 ஆம் வகுப்பு | |
| 5. | 4 ஆம் வகுப்பு | |
| 6. | 5 ஆம் வகுப்பு | |
| 7. | 6 ஆம் வகுப்பு | |
| 8. | 7 ஆம் வகுப்பு | |
| 9. | 8 ஆம் வகுப்பு | |

J. 12(c)பிரிவின் நோக்கத்திற்காக அருகிலுள்ள பகுதியின் பயன்பாடு

K. பள்ளியானது தீத்தடுப்பு விதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு அனைத்து சட்டவிதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

L. பள்ளியானது, இந்த விண்ணப்பத்துடன், மாவட்ட கல்வித் தகவல் முறையின் ஆவண வடிவத்தில் தகவல்கள் சமர்ப்பித்துள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

M. உரிய அதிகாரியால் அனுமதியளிக்கப்பட்ட யாதொரு அரசு அலுவலகம், நேரிடையாக பள்ளியை ஆய்வு செய்யலாம் என சான்றளிக்கப்படுகிறது.

N. மாவட்டக் கல்வி அலுவலர் அவ்வப்போது கேட்கும் அறிக்கைகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்காகவும், பள்ளி அங்கீகாரத்திற்கான நிபந்தனைகள் தொடர்ச்சியாக நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்த அல்லது பள்ளியின் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகளை அகற்ற பொருத்தமான அதிகார மன்றம் அல்லது மாவட்ட கல்வி அதிகாரி பிறப்பிக்கும் அத்தகைய உத்தரவுகளைப் பின்பற்றுவதாகவும் பள்ளி உறுதிமொழி அளிக்கிறது என்று சான்றளிக்கப்படுகிறது.

O. அச்சட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக பள்ளியின் பதிவேடுகள் எந்தவொரு நேரத்திலும், மாவட்டக் கல்வி அதிகாரியால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு அதிகாரி அல்லது பொருத்தமான அதிகாரி ஆய்வு செய்வதற்காக அளிக்கப்பட வேண்டும் என்றும், நேர்விற்கேற்ப நாடாளுமன்றம்/மாநிலத்தின் சட்டப்பேரவை/ஊராட்சி/மாநகராட்சிக்கு தன் பொறுப்புகளை அல்லது கடப்பாடுகளை நிறைவேற்ற மாநில மற்றும்/அல்லது மத்திய அரசு/உள்ளாட்சி மன்றம் அல்லது நிருவாகம் இயலும் வரையில் தேவையான அனைத்துத் தகவல்களையும் பள்ளி அளிக்குமென்றும் சான்றளிக்கப்படுகிறது.

(ஒம்)———————
நிருவாகக் குழு
தலைவர்/மேலாளர்
———————பள்ளி

## படிவம் -II

இடம்: தொலைபேசி:

தந்தி: நிகரி:

மின்னஞ்சல்:

(மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகம்
மாவட்டத்தின் பெயர் – மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதி)

எண்: நாள்:

மேலாளர்,

பொருள்: 2009 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் வரும் செயல்நோக்கத்திற்காக, 2010 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமை விதிகளில், 15 ஆம் விதியைச் சேர்ந்த (4) துணை விதியின் கீழ் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் சான்றிதழ்.

அன்புடையீர்,

உங்களுடைய ––––– ஆம் நாளிட்ட விண்ணப்பம், இதனையடுத்து இது தொடர்பாக பள்ளியில் நடத்தப்பட்ட ஆய்வு பற்றிய கடிதம் தொடர்பாக, –––––––– பள்ளிக்கு (பள்ளியின் பெயர் முகவரியுடன்)––––––––––– வகுப்பு முதல் –––––––––– வகுப்பு வரையில், மூன்றாண்டுகளுக்கு ––––––––– அதாவது –––––––– முதல் வரையிலான கால அளவிற்கு, தற்காலிக அங்கீகாரம் அளிக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்வரும் நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு உட்பட்டு, மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

1. பள்ளிக்கான இந்த அங்கீகாரம் நீட்டிக்கத் தக்கதல்ல மற்றும் எட்டாம் வகுப்பு அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு செல்வாக்கின் அடிப்படையில் அங்கீகாரம் அளிப்பது/இணைப்பது இதற்கு எவ்வகையிலும் பொருந்தாது.

2. 2009 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமைச் சட்டத்தின் விதித் துறைகள் மற்றும் 2010 ஆம் ஆண்டு சிறார்கள் இலவசக் கல்வி மற்றும் கட்டாயக் கல்வி பெறும் உரிமை விதிகளை பள்ளிகள் பின்பற்ற வேண்டும்.

3. அனுமதி கால அளவு முடியும் வரையில், பள்ளியின் சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள நலிவுற்ற பிரிவினர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினைச் சேர்ந்த இவர்களின் மொத்த எண்ணிக்கையில் % வரையில் 1–ல் சேர்த்துக் கொள்ள வேண்டும். (அந்தந்த நேர்விற்கேற்ப, தொடக்கக் கல்விக்கு முந்தைய வகுப்பிற்கும் இவ்விதிகள் பொருந்தும்)

4. பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள சிறார்களுக்கு, இச்சட்டத்தின் 12 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலுள்ள விதித் துறைகளுக்கிணங்க, பள்ளிகள் செலவுத் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும். இவ்வாறு திருப்பிச் செலுத்தப்படும் தொகையைப் பெறுவதற்கு, பள்ளி தனி வங்கி கணக்கு ஒன்றை வைத்துவர வேண்டும்.

5. சங்க/பள்ளி, எந்தவொரு நன்கொடை கட்டணத்தையும் வசூலிக்கக்கூடாது மற்றும் சிறார்களை அல்லது அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களை எந்தவொரு பரிசோதனை நடைமுறைக்கும் உட்படுத்தக்கூடாது.

6. எந்தவொரு சிறாரும் பள்ளியில் சேருவதற்கு, பள்ளி யாதொரு மறுப்பையும் தெரிவிக்கக்கூடாது.

a) பள்ளி சேர்க்கைக்கு பரிந்துரைக்கப்பட்ட கால வரையறை நீட்டிக்கப்பட்டதையடுத்து, பள்ளியில் சேர வரும் எந்தவொரு சிறாரையும் வயது சான்று இல்லாததால்,

b) சமயம், சாதி அல்லது இனம், பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையிலும், பள்ளியில் சேரும் சிறார்களின் உரிமை மறுக்கப்படக் கூடாது. பள்ளியானது, பின்வரும் கோட்பாடுகளை உறுதி செய்ய வேண்டும்.

i) சிறார்களை தொடக்கக் கல்வி கால அளவு முடிவடையும் வரை எந்த வகுப்பிலும் தகுதி நீக்கம் அல்லது பள்ளியிலிருந்து வெளியேற்றக் கூடாது.

ii) எந்தவொரு சிறாருக்கும் உடல் ரீதியான அல்லது மன உளைச்சலுக்கு உட்படும் தண்டனையை வழங்கக்கூடாது.

iii) தொடக்கக் கல்வி முடியும் வரையில் பள்ளிக் குழுமம் நடத்தும் எந்தவொரு நேர்விலும் தேர்ச்சிபெறத் தேவையில்லை.

iv) 25 ஆம் விதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தொடக்கக் கல்வி முடிக்கும் ஒவ்வொரு சிறாருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

v) இச்சட்டத்தின் விதித் துறைகளின்படி, தனி கவனம் செலுத்த வேண்டிய மாற்றுத் திறனாளி மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

vi) இச்சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, குறைந்தளவு கல்வித் தகுதியுடன் ஆசிரியர்கள் பணியில் நியமிக்கப்படுகின்றார். ஆனால், இச்சட்டம் செயல்படத் தொடங்கிய போது, குறைந்தளவு கல்வித் தகுதியைப் பெற்றிராத நடப்பு ஆசிரியர்கள், தங்களுடைய 5 ஆண்டு பணிக்காலத்திற்குள்,

இத்தகைய குறைந்தளவு கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

vii) இச்சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான பணிப்பொறுப்புகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

viii) தனிப்பட்ட பயிற்று நடவடிக்கைகளில், எந்தவொரு ஆசிரியரும் ஈடுபடக்கூடாது.

7) உரிய அதிகார மன்றம் வரையறுத்துள்ள அடிப்படையிலான பாடத் திட்டத்தை, பள்ளிகள் பின்பற்ற வேண்டும்.

8) இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பள்ளியின் தரங்களையும், கோட்பாடுகளையும் பள்ளிகள் வைத்துவர வேண்டும்.

9) பள்ளி வளாகத்திற்குள் அல்லது வேறு இடத்தில் அதே பள்ளி பெயரிலான பள்ளிகளில் அங்கீகாரம் அளிக்கப்படாத வகுப்புகள் நடத்தப்படக் கூடாது.

10) கல்வி மற்றும் திறன் வளர்ச்சி மேம்பாடு தொடர்பான நோக்கங்களுக்காக மட்டுமே, பள்ளிக் கட்டடங்கள் அல்லது ஏனைய கட்டுமானங்கள் அல்லது பள்ளி மைதானங்களை பயன்படுத்துகிறது.

11) 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 21/1860) கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் வாயிலாக அல்லது தற்போது செயலலிருக்கும் எந்தவொரு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பொது அறங்காவலர்களால் பள்ளி செயல்படுகிறது.

12) எந்தவொரு தனி நபர், குழு அல்லது தனி நபர்கள் அடங்கிய சங்கம் அல்லது ஏனைய பிற நபர்களின் ஆதாயத்திற்காகப் பள்ளி நடத்தப்படவில்லை.

13) கணக்குகள் தணிக்கையிடப்பட்டு, பட்டயக் கணக்கர்களால் சான்றளிக்கப்பட வேண்டும் மற்றும் முறையான கணக்குகள் பற்றிய விவர அறிக்கைகள், விதிகளின்படி தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வோராண்டும்

கணக்கு விவர அறிக்கைகளின் நகல் ஒவ்வொன்றும், மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

14) உங்களுடைய பள்ளிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளி அங்கீகார குறியீட்டு எண் இந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படுகின்ற கடிதங்களில், இக்குறியீட்டு எண் குறிப்பிடப்படலாம்.

15) கல்வித் துறை இயக்குநர்/மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து அவ்வப்போது கோரப்படுகின்றவாறு பள்ளி நிருவாகம் அனுப்பி வைக்கின்றது. இத்தகைய அறிக்கைகள் மற்றும் தகவல்கள், பள்ளி அங்கீகார நிபந்தனைகள் தொடர்ந்து முழுமையாக பாதுகாக்கப்படும் வகையிலும் அல்லது பள்ளிச் செயல்முறைகளிலுள்ள குறைபாடுகளைக் களைவதற்கும், மாநில அரசு/உள்ளூர் கல்வி அதிகார மன்றம் பிறப்பிக்கப்படுகின்ற இத்தகைய கட்டளைகளுக்கு இணங்க இருக்கின்றன.

16) சங்கங்களின் பதிவு புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தால், அவை புதுப்பிக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

17) இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவரான ஏனைய நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளது.

18) யாதொரு சட்ட விதித்துறைகள், விதிகள் அங்கீகார நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டால் மற்றும் இது நிருபிக்கப்பட்டால் பள்ளி அங்கீகாரம் திரும்பப் பெறப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒம்) XXX

மாவட்டக் கல்வி அலுவலர்.

படிவம் III

சான்றிதழ்

கிராமத்தில் "கதவு எண்."                                  என்ற முகவரியில்

வகிப்பவரும், திரு                                  என்பவரின் மகனான

(மாணவரின் பெயர்), 2010, 2011 ஆம் ஆண்டு கால அளவில்

(இடத்தில்) ஊராட்சி ஒன்றியத்தின் நடுநிலைப் பள்ளி/மாணவர்களுக்கான அரசினர் உயர் நிலைப் பள்ளி/மாணவிகளுக்கான அரசினர் உயர்நிலைப் பள்ளி/ மேநிலைப் பள்ளி வாயிலாக நடத்தப்பட்ட 8 ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்று இதனால் சான்றளிக்கப்படுகிறது.

தலைமை ஆசிரியர்,

(பள்ளியின் பெயர்)

இடம்

நாள்